என். எஸ். கே. அவர்களும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களும் மறக்க முடியாத கலைஞர்கள் ஆவார்கள். அவர்களுடைய நினைவாகவும் அவர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலும் அவர்களுடைய குடும்பத்தாரைப் பாதுகாக்கின்ற வகையிலும் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த நிதி உதவி செய்கின்ற திட்டத்தின் அடிப்படையில்தான் கலைஞர் களுக்கு உதவி செய்து வருகிறது. பழம்பெரும் புகழ்வாய்ந்த கலைஞர்கள் பலர் நொடிந்த நிலையில் உள்ளவர்கள் இத்தகைய நிதி உதவியைப் பெற்று வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அத்தகைய வர்களின் குடும்பத்தினருக்குத் தனி முயற்சி எடுக்க வேண்டுமே தவிர, இந்தத் திட்டத்தின்கீழ் வராது.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, நடிகர்கள் பொதுவாக எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்கிறார்கள். ஆனால் இத்தனை வயது வரை இன்ன இன்ன பாத்திரங்களில் நடிக்கலாம் என்ற உச்ச வரம்பை அரசு நிர்ணயிக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி வரையறுக்க இயலாது. பார்க்கிறவர்களுடைய தன்மையையும் அவர்களுடைய கலைத் திறமையையும் பொறுத்திருக்கிறது.

தென் இந்திய நடிகர் சங்கம்.

* 472 வினு : திரு. என்.கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

தென் இந்திய நடிகர் சங்கக் கட்டடம் கட்ட, தமிழ்நாடு அரசு, நிதி ஏதேனும் உதவ முன் வந்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி.

* 473 வினு : திரு. என்.கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) மாயூரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(இ) அதில் அரசு மானியமாக வழங்கும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக ரூ. 4,10,000